S. R. PICTURES,
8. KARPURA MUDALI ST.,
PERIAMET, MADRAS-3.

அஸோஸியேடட் ப்ரொட்யூஸர்ஸ்

ஆசை மகன்

அஸோஸியேடட் ப்ரொட்யூஸர்ஸ்

ஆசை மகன்

நடிகர்கள்

R கணேஷ் — சேகர்
B. R. பந்துலு — சதாசிவமுதலியார்
T. S. பாலையா — விக்ரமன்
ஸத்யன் — சந்திரன்
T. P. பொன்னுசாமிபிள்ளை — போஸ்ட் மாஸ்டர்
பிரண்ட் ராமசாமி — கணக்கப்பிள்ளை
மாஸ்டர் சேது — சேகர் (Jr)
மாஸ்டர் ஷெரீப் — சந்திரன் (Jr)

S. S. சிவசூரியன், T. V. சேதுராமன், V. P. S. மணி, V. T. கலியாணம், பொட்டை கிருஷ்ணமூர்த்தி......

நடிகையர்

பத்மினி — ஜெயந்தி
B. S. சரோஜா — சாந்தா
பங்கஜவல்லி — மங்களம்
கிரிஜா — சரளா
T. N. மீனுக்ஷி — லெக்ஷ்மி
பேபி வாசந்தி — சாந்தா (Jr)
அங்கமுத்து

பின்னணி இசை

P. லீலா, M. L. வஸந்தகுமாரி, ஜிக்கி, கண்டசாலா,

வர்மா, ராஜா.

கதை		அஸோஸியேடட் கதை இலாகா
வசனம்		நாகர்கோயில் பத்மநாபன்
பாடல்கள்	...	குயிலன்
சங்கீதம்	...	V. தக்ஷிணாமூர்த்தி
நடன அமைப்பு	...	K. R. குமார்
ஆர்ட்	...	கங்கா
மேக்-அப்	...	பீதாம்பரம்
உதவி	...	பக்தவத்ஸலம் நவநீதம் ராகவன் குற்றாலம்
உடைகள்	...	கணேசன்
ஒளிப்பதிவு டைரெக்ஷன்		ஆதி. M. இராணி
ஒளிப்பதிவு	...	R. ராஜகோபால் B. A.,
உதவி	...	வெங்கிட்ராவ்
ஒலிப்பதிவு டைரெக்ஷன்		A. கிருஷ்ணன் B. A.,
ஒலிப்பதிவு	...	K. விஸ்வநாதன் B. Sc.
உதவி	...	ஜெகன்னாத் நரசிம்மமூர்த்தி
எடிட்டிங்	...	M. S. மணி
ஸ்டில்ஸ்	...	R. V. சாரி B. A.,
ப்ரொடக்ஷன் மானேஜர்		R. ரெங்கராஜ்
உதவி	...	J. D. தோட்டான்

டைரெக்ஷன்

G. R. ராவ்

உதவி

S. S. ராஜன்

ஆசை மகன்

—:o:—

திரைக்கதை

“**மா**மா! பீ. எல். படிப்பில் ஆசை மட்டுமல்ல; அதை என் ஜீவலட்சியமாகவே நினைக்கிறேன்.” உணர்ச்சி வேகத்தால் **சந்திரனின்** குரல் தடுமாறியது. “அண்ணா! இந்த சமயத்தில் உதவி செய்ய உங்களைத்தவிர யாருமே இல்லை...” மகனுக்காக மன்றாடினாள், தாய் **லெக்ஷ்மி**. “அண்ணா அண்ணாங்கிறியே, அண்ணன் என்ன குபேரனா?” இது முதலியார் மனைவி **மங்களத்**தின் முழக்கம். அவள் ஒரு பட்டாசுக்கட்டு: காரணமில்லாமலே அது வெடிக்கும்! “சந்திரா! அடுத்த வருஷம் ஆகட்டுமப்பா” என்றார் **முதலியார்.**

உதவி மகத்தானது. ஆனால்... அது சமயத்தில் செய்யப்பட வேண்டும். தாயும் மகனும் தளர்ந்த உள்ளத்தோடு, கலங்கிய விழிகளோடு வெளியே நடந்தனர். முதலியார் விரும்பியிருந்தால் ஒரு சந்திரனுக்கல்ல; ஒரு டஜன் சந்திரன்களுக்கு உதவி இருக்கமுடியும். அவர் நல்லவர்தான். ஆனால் சந்தர்ப்பக் கோளாறு அந்த நல்லவரையும் சக்தியற்றவனாக்கி விட்டது.

சேகர், முதலியாரின் ஒரே மகன். வாழ்க்கை நதியிலே நீந்தி ஆனந்திக்க, வரட்டுக்கல்வியறிவு பயன்படாது என்று நம்பும் வாலிபமேதைகள் கூட்டத்தைச் சார்ந்தவன். மதுவும் மங்கையும் தான் அவனது பொழுது போக்கு; அவனறிந்த கல்வியறிவு!

மாமன்வீட்டிலிருந்து வெறும் கண்ணீரோடு மட்டும் சந்திரன் வெளியேறவில்லை. “பட்டினிகிடந்து பிராணனைவிடநேர்ந்தாலும் கூட அந்த வீட்டில் இனி காலெடுத்து வைக்கக்கூடாது” என்ற வைராக்கியத்தோடுதான் வெளியேறினான். தாயும் மகனும் உடைந்த மனத்தோடு தரித்திரம் நிலவும் தங்கள் வீட்டினுள் வந்தனர். அவர்கள் வரவுக்காக ஆவலோடு ஒரு இதயம் காத்துக் கொண்டிருந்தது **சாந்தா!** சந்திரனின் அருமைத்தங்கை. அண்ணன், அம்மா இருவரது கண்களிலும் நிலவிய சோக ஒளியைக்கண்ட சாந்தா, போனகாரியம் வெற்றிபெறவில்லை என்

பதை அறிந்து கொண்டாள். ஏக்கம் பிடித்த நிலையிலிருந்த சந்திரனிடம் தன் நகைகளை யெல்லாம் கழற்றிக் கொடுத்து "இதையெல்லாம் விற்றுவிடு; உன் படிப்பும் சந்தோஷமும் தான் எனக்கு நகைகள்." என்றாள்...மகளின் வார்த்தைகள் மறைந்து நின்று கேட்ட லெக்ஷிமியின் மனதை அறுத்தன...விம்மித்துடித்தாள் அந்த ஏழைத்தாய்.

ஆயினும் இருள் சூழ்ந்த அவர்கள் வாழ்வில் ஒரு ஒளி தென்படாமல் போகவில்லை. அமாவாசை இருட்டிலும் கூட ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ஜொலிப்பதுண்டு. கருணையுள்ள ஒருவர் தயவால் பணம் பெற்று, படிப்புக்காகச் சந்திரன் சென்னை சென்றான். மகனின் படிப்பு தொடர்ந்து நடக்க இரவும் பகலும் லெக்ஷிமி தையல் மிஷினில் உழைத்தாள்! உழைப்பின் களைப்பிலே எழுந்தபசியை அடக்க அவளருந்திய உணவு......பச்சைத் தண்ணீர்!

எப்படியாவது சேகருக்குக் கலியாணம் செய்யவேண்டும் என்ற கவலையில், முதலியாரும் மங்களமும் மூழ்கியிருந்தனர். ஆனால் "கேடுகெட்ட" சேகருக்குப் பெண் கொடுக்க யாருமே முன்வரவில்லை. சேகருக்கும் அதைப்பற்றிய கவலைகிடையாது. அவன் கவனமெல்லாம் நாட்டியக்காரி ஜெயந்தியிடமே லயித்திருந்தது. அந்தப் படுக்கையறை மோஹினியின் பாசாங்குச் சிரிப்பிலே பைத்தியமாகிவிட்டான் சேகர்!

லெக்ஷிமியின் வீட்டுக்கு ஒருநாள் முதலியார் வந்தார். "சேகர் கொஞ்சம் கெட்டுத்தான் போயிட்டான்...அதுக்காக அவன் எப்பவுமே திருந்தமாட்டான்னு நினைக்கிறியா? உன்மகள் வந்தா அவன் கண்டிப்பா நல்லவனாகிடுவான், லெக்ஷிமி..." கண்ணீர் மல்க முதலியார் கூறினார். "இந்தவிஷயத்தில் சந்திரன் அபிப்பிராயம் தான் முடிவானது" என்றாள் லெக்ஷிமி. அவனுக்கு எழுதி, அவன் அபிப்பிராயம் அறிவதாகக் கூறிச் சென்றார் முதலியார்.

திடீரென லெக்ஷிமிக்கொரு தந்தி. "மாமா யோசனைக்கு சம்மதம்; 27ந்தேதியே விவாகத்தை நடத்துங்கள்; நான் 26ந்தேதி வந்து சேருகிறேன்...சந்திரன்." லெக்ஷிமி ஒன்றும் புரியாமல் திகைத்தாள். சாந்தா விம்மித்துடித்தாள். "அண்ணா! விவாக முடிவை நிச்சயிக்குமுன்பு ஒருவார்த்தையாவது என்னிடம்

கேட்கக்கூடாதா?'' என்று தன் கண்ணீரையெல்லாம் கொட்டி சந்திரனுக்கொரு கடிதம் அனுப்பினாள்...

27ந்தேதி காலை. மேளகீதம் முழங்கியது; சந்தனமும், பன்னீரும் நறுமணத்தைப் பரப்பின. அதே வேளையில் வாயுவேகமாகக் கலியாணவீட்டை சந்திரன் சமீபித்துக்கொண்டிருந்தான். ஆனால்...மணப்பந்தலிலே அவன் கால் வைப்பதும், சாந்தா கழுத்தில் சேகர் தாலி கட்டுவதும் ஏககாலத்தில் நிகழ்ந்தன...

மங்களம் பெருகவேண்டிய அந்த நாளிலே மாபெரும் புயலொன்று எழுந்தது' எத்தனையோ உள்ளங்கள் அந்த வேதனைப் புயலிலே சிக்கித்தவித்தன. குற்றமறியாத இதயத்திலே கொந்தளிப்பு; பாபமறியாத இதயத்திலே பயங்கரத் துன்பம்...

...புயல் ஓய்ந்து அமைதி...

சாந்தாவின் இல்லறவாழ்க்கை ஆரம்பமாயிற்று: கட்டின புருஷனைத் தெய்வமாக மதித்துப் போற்றிவந்தாள். ஆனால் அந்த மடையனோ, மனைவி என்ற முத்திரையைத்தவிர எதையுமே அவளுக்களிக்கவில்லை. பிறந்த வீட்டில் வறுமை; புகுந்த வீட்டிலோ...கண்ணீரும், கஷ்டமும்! முதலியார் மட்டும் இல்லாவிட்டால் அந்தப் பெண் ஜென்மம் எப்பொழுதோ இறைவனை நாடிச் சென்றிருக்கும்.

மனிதனையும் பணத்தையும் மதியாத காலம், வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இன்பமும் பிரகாசமும் நிரம்பிய சேகரின் வீட்டிலே, அவன் செய்கையால் இருள் சூழ்ந்தது. அந்த இருளிலே, இரண்டு இதயங்கள் இன்னல் தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தன. முடிவில்; ஒரு இதயத்துக்கு விடுதலை கிடைத்தது. நாளுக்கு நாள் நாசம் பெருத்துவரும் இந்த நாகரீக உலகை விட்டு முதலியார் கண்ணைமூடினார்.

மகனின் மடியிலே தலைவைத்துக் கண்மூடவேண்டுமென்று தந்தை விரும்பினார். மகன் வரவில்லை. மானங்கெட்ட ஜெயந்தியின் சாகஸத்திலே அவன் மயங்கிக்கிடந்தான். சமாதிகட்ட வேண்டிய அந்த நாகசர்ப்பத்தைப் பணத்தாலும் பொருளாலும் அலங்கரித்தான். இந்த நாச நாட்டியத்துக்கு நட்டுவனார், விக்ரமன் என்ற அக்கிரமக்காரன். மானங்கெட்டவள் மகிழ்ச்சியில் புர

ளும்போது, மாலேயிட்டவள் துடித்துக்கொண்டிருந்தாள்; ஒரே ஒரு ஆதரவாக இருந்த அவள் குழந்தையும் கண்ணேமூடிவிட்டது.

இந்த வேளேயில்தான் சந்திரன் வந்து அவளே அழைத்துச் சென்ருன். சந்திரன் இப்போது புகழும் பணமும் படைத்த ஒரு வக்கீல்.

அன்று சந்திரனின் திருமண தினம். அதே நாளில் முதலியார் வீட்டில் பல பயங்கர சம்பவங்கள் நடந்தன. செல்வத்தின் சின்னமாக இருந்த அந்த வீடு ஜப்தி செய்யப்பட்டது : மங்களம் நடுத்தெருவில் நின்ருள். நன்றி மறவாத கணக்குப்பிள்ளே அவளேத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்ருன். வீடு திரும்பிய சேகர், வாசலில் ஸீல் வைத்திருப்பதைக் கண்டான். அறிவுக் கண் அப்போதுதான் திறக்க ஆரம்பித்தது; மனச்சாட்சி வதைத்தது. தாயைப் பார்க்க ஓடினன்.

ஆனல் அங்கே தாய் இல்லே : அன்பின் சிகரமான சந்திரன் அவள் கண்ணீரைத்துடைத்துத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டான். சேகர் கதறினன்...விம்மினன்...தாயைப் பார்க்க ஓடினன்...ஆனல் மற்ெருரு முக்கிய வேலே—சாந்தாவின் உயிரைக் காப்பாற்றும் வேலே—அவனுக்குக் காத்திருந்தது. நேராக விக்ரமனேத் தேடிச்சென்ருன். விக்ரமனேக் கண்டது ஜெயந்தியின் வீட்டில்; அதுவும் சேகர் திடுக்கிடும் நிலேயில்... ஆத்திரத்தில் சேகர் பிசாசானுன்: பல சம்பவங்கள் நடந்தன......

கொட்டும் மழையில் சாந்தாவைக்காப்பாற்ற சந்திரன் வீட்டை நோக்கி சேகர் ஓடினன். பின்னல் போலீஸார் ! சந்திரன் வீட்டினுள் வந்ததும் சேகர் கண்ட காட்சி ?

'ஆசை மகன்' பதிலளிப்பான்!

ஆசை மகன்

பாடல்கள்

[1]

சாந்தா

பல்லவி

நீயே அருள் வேலனே—எந்நாளும்
நினது புகழ் பாடவே (நீயே)

அநுபல்லவி

உலகினில் இன்புடனே உயிர் வாழவே
உறுதியும் நேர்மையும் ஓங்கிடவே (நீயே)

சரணம்

தேவா மரகத மயிலினில் உடன் வா வா
எளியவர் துணையென வரு பாலா
அபயம் தருகும் முருகா
இணையிலா அழகனே
அடியவர் மனதில்
அநுதினம் வாழ்பவனே குணசீலனே
ஆதரம் வேறில்லை அறியாயோ (நீயே)

[2]

ஜயந்தி—நாட்டியம்

பாயும் கண்களால் யாரையும் வெல்லுவேனே
பாரில் ரம்பை நானே
பாடும் புள்ளி மானே
பாயும் கண்களால் யாரையும் வெல்லுவேன்

இப் பாராளும் ராஜன் என் தாஸானு தாஸன்
ஆவான் அன்பாலே பார்மீதிலே
பாயும் கண்களால் வெல்லுவேன்

காலில் தங்கச் சலங்கை குலுங்க
கைகள் தாளங்கள் கொட்டி முழங்க (காலில்)

நின்று ஆடுங்கள் ஆனந்த கீதங்கள் பாடுங்கள்
ஓ.......ஓ........ஓ........(காலில்)

வெண்ணி லாவைப் போலே
விண்மீதிருந்து மேலே—தன்
கண்ணாலே அழைத்திடும் நல் சுந்தரி யாரோ
சுந்தரியாரோ—தினகர சுந்தரி யாரோ

பலருள்ளம் கவர்கின்ற ராணியிவள்
ரூப—வாணியிவள்

தேவி பாதங்கள் பட்டாலே யோகம் வரும்
சுக—போகம் வரும்

நின்று ஆடுங்கள் பாடுங்கள் தாளங்கள் போடுங்கள்
ஓ.......ஓ........ஓ........(காலில்)

ஜிகு ஜிகு ஜிம் ஜிகு ஜிகு
" "
" "
" "
" "

ஜிகுஜிகு ஜிகுஜிம் ஜிகுஜிகு ஜிகுஜிம்.......................
....

[3]

சரளா

கிராமத்தின் இதயம் பேரன்பின் நிலயம்
கிராமத்தின் இதயமே பேரன்பின் நிலயம்
ஆனந்தம் அலைவீசும் எந்நாளும் இங்கே
பூமியில் ஈடிதற்கு எங்கே

பூந் தென்றலி லாடி—நெல் மணி தேடி
பூந் தென்றலி லாடிநல் நெல் மணி தேடி
மாடத்தைத் தேடிவரும் ஜோடிப் புருவே
கிராமத்தின் கீதத்தைப் பாடு

வலிமைகொண்ட உழவர்கள்
காட்டை நாடாகச் செய்தார்
வயல்களில்தம் வேர்வையை
ஆற்று நீராகப் பெய்தார்

பயிர்கள் வளர்ந்து கதிர்கள் விளைத்து
மண்ணைப் பொன்னுக மாற்றும்
வலிமைகொண்ட உழவனே
நீயே சௌபாக்ய தூதன்

அமரர் லோகம் போலே என்றும்
அன்புடன் அழகும் கொஞ்சும் கிராமம்
வளமிகு மண்ணின் மேலே என்றும்
வைரம் விளைகின்ற கிராமம் (கிராமத்தின்)

[4]

சாந்தா—சரளா

பல்லவி

கலைகள் மிகுந்த எங்கள் தமிழ் வாழ்கவே—என்றும்
நிலையான மொழியே உன் புகழ்பாடுவேன் அருமை (கலைகள்)

அநுபல்லவி

அலை மேவும் கடல் தந்த ஆரமுதேபோல்
இணையே இலை எனவே இன் சுவையாகவே வளரும் (கலைகள்)

சரணங்கள்

கரும்பான கவியாம் கம்பனின் பாடலே---தேன்
வழிந் தோடும் நதிபோல் நல் விருந்தாகுமே
வீரன் பாரதி பாடல் அழகால்
தேசம் உயர் வாகுமே (கரும்பான)

வள்ளுவன் குறளாலே வளர்ந்த தாய்மொழி
உள்ளம் கொள்ளை கொள்ளும் இலக்கியம் சேர்மொழி
தெள்ளுகவி மலர்கள் தேடி நிதம் தந்த
ஒளவையும் இளங்கோவும் யாவரும் போற்றிய (கலைகள்)

[5]

ஜயந்தி

ராஜாவே நல்ல ரோஜாவைப் பார்
பொன்காலை நேரம்—இப்
பூஞ்சோலை ஓரம்
பூத்திருக்கு உனக்கே காத்திருக்கு (ராஜாவே)

வாச முள்ளது என்ற போதிலும்
வண்டு தொட்டது இல்லையே
ஆசை யுள்ளது என்ற போதிலும்
யாரும் தொட்டது இல்லையே
நேசமுள்ள சீமான் உன் நினைவாலே தேடுதே
நீங்காது தேனூறுதே........ (ராஜாவே)

பனி நீரில் ஆடி—உன்
பாசத்தை நாடி
தனியாக ஏங்குது பாராயிங்கே

பூவேண்டுமா—இதழ்
தான் வேண்டுமா—இல்லை
தேன் வேண்டுமா
இதில் எதுவேண்டும் சொல்வாயே.... (ராஜாவே)

[6]

சரளா

வான வில்லென வந்து காதலின்
வர்ண ஜாலங்கள் காட்டினாய்
மாசில்லாத என் உள்ள வீணையில்
மௌன கீதங்கள் மீட்டினாய்
வாழ்வின் ஆனந்தப் பொன் முனைகளில்
வந்து பேரொளி வீசினாய்
வாழ்க நீ எந்தன் உள்ளக் கோயிலில்
வாழ்க வாழ்க நீ என்றுமே

வான வீதியில் ஓடும் மேகங்கள்
வர்ண வில்லினை மூடுமோ
மாசில்லாத என் உள்ளக் கோட்டைகள்
மண்ணில் வீழ்ந்து மண்ணாகுமோ
தேனில் தோய்ந்தெழும் எந்தன் ஆசைகள்
தேய்ந்து மாய்ந்திடும் காலமோ
தீருமோ துயர் மாறுமோ
அறியாது என்மனம் ஏங்குதே

[7]

பின்னணி

மானிட வாழ்விதுவே
மரணம் ஜனனம் வையக நியமம்
மானிட வாழ்விதுவே

கருகிடும் உடல்முன் அழுதிடும் மகனே
கண்ணீராலே உன்பாபம் விடுமோ
கருகிடும் உடல் முன்

தந்தை வாழ்வில் நஞ்சாய் வந்தாய்
தனயன் என்னும் கடமை மறந்தாய்
நீயொரு மானிடனே

ஜனனத் தாலே ஆசைகள் இங்கே
மரணத் தாலே நிராசை அங்கே
ஜனனத் தாலே

வேசை வலையில் வீழும் மனிதா
மோசம் அடைவாய் வீணே அழிவாய்
மானிட வாழ்விதுவோ...

[8]

சாந்தா

தாலேலோ ராஜாஎன் கண்ணே நீவா—செல்வமே
பொன்னான ரோஜா தாலேலோ ராஜா

உன் தந்தைதானே உனைத்தேடி வருவார்
பொருளெல்லாம் தருவார்
பொன் தொட்டில் மேலே துயில் கொள்ள விடுவார்
வாழ்வின்பம் யாவும் பெறுவாயே இனிதே

துயர் சூழும் என் வாழ்வின் இருள் நீங்கவே வெண்ணிலா
போலே நீ வாவா தாலேலோ ராஜா

என தாசைக் கனியே இணையில்லா மணிமுத்தே
உனதாசை மாமாபோல்
ஓயாது கல்வி கற்று
வாடாநீ புகழ் பெற்று

கனியூறும் தேனே என் கலிதீரவே என்றுமே
அன்பேநீ வாவா தாலேலோ ராஜா... (தாலேலோ

[9]

ஜயந்தி—சேகர்

சே-ஜயந் ஓடம் ஏறிச் சென்றே—காதல் கனுவிலே
ஜோடியாய் இருந்தே மகிழ்ந்தே
நாமே உலாவுவோம் நாமே உலாவுவோம் (ஓட

சேகர் அலையோடு ஆழி சேர்ந்தே
ஆனந்த மாவதேபோல்

ஜயந்தி நலமாக நாமும் சேர்ந்தே
பேரின்பங் காணுவோமே

சேகர் உள்ளங்கள் ஒன்று சேர்ந்தால்
யுகமே விநாடி யாகும்

ஜயந்தி கவலை பறந்து போகும்
காலம் பொன்னுன தாகும்

சே-ஜயந் குறையே இல்லாது இன்பம் காண்போம்
வாழ்வே குதூகலந்தான்....வாழ்வே குதூகலந்தான்

ஜயந்தி மாங்குயில் பாடும்—மயில் ஆடும்
இள மான்கள் ஓடும்

சேகர் மாமலை யோரம்—இந்த நேரம்
வெகு வேகம் செல்வோம்

சே-ஜயந் நாமின்ப வானம்பாடி நம்போல் வேறுண்டோ
குறையே இல்லாது இன்பங் காண்போம்
வாழ்வே குதூகலந்தான்
வாழ்வே குதூகலந்தான் (ஓ

[10]

பின்னணி

வினையினாலே வந்த தீமை
தனை நினைந்தே நோவ தேனோ
அழுவதாலே ஆவதென்ன
அன்று செய்த வினையினாலே (வினை)

அளவு மீறிய அன்பு செய்தனை
அமுதமே விஷம் ஆகி விட்டது
அதனை நீயும் அறிகிலாயோ (வினை

களிப்புடனே தாராட்டியே
கருணையொடு பாலூட்டியே
கண்ணின் மணிபோலே
இரவுபகல் காத்து வந்த
மகனிவனோ............

நன்மையெனும் நல்லவிதை யாலே—தாயேநீ
உன்மகனை உருவாக்க வில்லையே
தீமையெனும் நீரூற்றி பாபமாம் எருவைத்தே
தாய்மை யெனும் பேரன்பு ஒளியினாலே வளர்த்தே
நன்மைகள் அணுகாது வேலியும் தானாகி
நீ காத்து வந்ததின் பலனிதோ தாயே
நீ செய்ததால் வந்த வினையே